குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

ஆசிரியர் : சந்திரா ஸ்ரீதர்

பதிப்பு : 7/2024/4



குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
**Kurinji Muthamizh Sangam & Academy**


**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
chandra.srithar01@gmail.com

**Co-editor : Master. Suryha Venkataramani**
**இணை ஆசிரியர்:**
**செல்வன். சூரியா வெங்கட்ரமணி**


**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, "நிகழினி இதழ்" தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயப்படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்லத் தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

# ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

இந்த இதழில் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம்.
மகிழ்ச்சியாக வாசியுங்கள்!

ஏமாற்றங்கள் தரும் எதிர்பார்ப்புகளுக்கு
எண்ணற்ற நேரம் செலவிடுவதைத் தவிர்த்து,
உயர்வைத் தரும் உன்னதமான வேலைக்கு
உரிமைக் கொடு வெற்றி உனதே!

கற்றல் என்பது, கல்வியில் ஒருவகை
படித்தல் என்பது, சொல் வளத்தின் மறுமுகம்
எழுதுதல் என்பது, ஏனைய அனைத்திற்கும் ஏணிப்படி!
எடுத்துக்காட்டு,
வள்ளுவரின் திருக்குறள் அவர் எழுதியதால் மட்டுமே,
இன்றும் உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது.
எனவே, வருங்காலத் தலைமுறைகளின்
எழுதும் திறனை, ஊக்குவிக்கும் வகையில்
அவர்களின் எழுத்துக்களை வெளியிடுவதில்
நிகழினி நிர்வாகம் பெருமைக் கொள்கிறது.



இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்

# கிராமத்து கீதம்

நாகரீகம் என்ற பெயரில்
நாம் மாறியபோதும்,
மாறாதது நம் மூத்தகுடி வரலாறு!
ஒருபோதும் நம் வரலாறு மாறாது!
பாரம்பரியம் என்பது
பன்மை தொட்டு வருவது,
ஆடம்பர மற்றும் அவசர வாழ்வில்,
தொலைத்துவிடவேண்டாம் என்று,
நாட்டுப்புற கலைகளின்
நாடித் துடிப்பு,
கிராம இசையின்
கிளைக் குயில்கள்,
கீதம் பாட வந்தது
நம் கொலோராடோ!

பிறந்தது கிராமம், பிழைப்பு தேடி வந்தது நகரம். நகரவாழ்வில் தொலைத்த நம் நாகரிகத்தை தேடித் தந்து, அதைப் பாடலாக நமக்குத் திருப்பி அளித்து, அமிர்தத்தை வழங்கிய, அன்பின் உருவம் சகோதரர் செந்தில் கணேஷ் மற்றும் அழகின் பிறப்பு அன்பு சகோதரி ராஜலக்ஷ்மியின் வருகை ஒரு உறவின் உன்னதமான மகிழ்ச்சியன்றோ?

கொலோராடோ மண்ணில் கிராமத்தின் கொடியை அசைத்தது, உங்கள் கீதங்கள் அல்லவா? நீங்கள் அளித்த இந்த வரத்தை வாழ்நாள் முழுவதும் நாங்கள் மறக்கமாட்டோம்.

நிலம் தந்தது ஊற்று
வானம் தந்தது காற்று
இசை தந்தது பாட்டு
காலம் முழுவதும் அதைப் போற்ற,
கலைத்தாய் கொடுத்த கண்மணிகள் நீங்கள்!
விண்வெளி வரை உம் புகழ் பரவ வேண்டும்!
நிலவின் வெண்மை கூட,
உம் பண் இசை கேட்டதால்தான் என்னவோ?

**-நன்றி**
**செந்தில் கணேஷ் சந்திரன் & சகோதரி ராஜலக்ஷ்மி**
**மற்றும் மக்கள் இசைக்குழு**

# செந்தில் ராஜலெட்சுமி மக்கள் இசை நிகழ்ச்சி






















# குறிஞ்சிப்பாடல் வெளியீட்டு விழா







# தீபாவளிக் கொண்டாட்டம்





## குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் குதூகல கிராம இசைக் கொண்டாட்டம்

கடந்த அக்டோபர் மாதம் 25 ம் நாள், மறக்கமுடியாத ஒருநாள். மண்ணின் மணம் நம் கொலோராடோவில் கமழ்ந்த நாள். **நம் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, நடத்திய மக்கள் இசைக் குழுவின், பாரம்பரிய கிராமப் பாடல்கள் பட்டி, தொட்டி எங்கும் உள்ள மக்களுக்கு ஒலித்த நாள். நம் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் முக்கிய நோக்கமே! இயல், இசை, நாடகம் என வருங்காலத் தலைமுறை, இம்மூன்றின் முதன்மையைத் தெரிந்து கொள்ளச் செய்வதே ஆகும்.

அதில் இசைக்காக இயைந்த ஒரு நிகழ்ச்சிதான், மக்கள் இசை நிகழ்ச்சி. மக்கள் இசைக் குழு வழக்கம்போல் மண்ணின் மணத்தை தெளித்தனர். அதில் 200 மக்கள், மணத்தில் நனைந்தனர். அதற்காக அமைக்கப்பட்ட இடமும் அழகாய் இருந்தது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று, என்ற அவ்வை சொல்லுக்கிணங்க ஹிந்து சென்டேனியல் கோவிலில் நடைபெற்றது. வந்தவர்கள் இசையை மட்டுமின்றி, இறைவனின் அருளையும் பெற்றனர். அந்த பாக்கியத்தை வழங்கிய குறிஞ்சி முத்தமிழ் சங்கத்திற்கு நன்றி! அதுமட்டுமின்றி, வருங்காலத் தலைமுறைகளின் பங்களிப்பு போற்றப்படவேண்டிய ஒன்றாகும். அப்படி, தன்னார்வலர்களாகத் தங்களின் பணியை சிறப்புடன் முடித்தக் குறிஞ்சி மாணவர்களுக்கு நன்றி!

**மாணவர்கள் பெயர்கள்:**
**மக்கள் இசைக் குழு**
**வழி நடத்தியவர்கள்**

1. க்ருபன்யா
2. இனியா
3. யாழிசை
4. அன்வித்
5. அவந்திகா
6. கவின்
7. யாழினி
8. ஸ்ம்ரிதி
9. இலக்கியா
10. ஸ்ரீ
11. சஞ்சனா

**குறிஞ்சி இசைக்குழு - பங்கேற்பாளர்கள்**

1. ஜெகன் அருண்பிரசாத்
2. ஆதிரா அருண்பிரசாத்
3. ஆத்விக் ராஜேஷ்
4. அன்வித் ராஜேஷ்
5 .லசாங்கிகா சுகுமாறன்
6. மகாஷ்ரித்தா அசோக்
7. கனிஷ்கா சுகுமாறன்
8. அவந்திகா செலுகா தினேஷ்
9. அம்ரிதா செலுகா தினேஷ்
10. தக்ஷ் ராகவேந்திரா கோகுலகிரிதரன் .
11. கவின் ப்ரவின்பாபு
12. ஸ்ருதி மகேஷ்குமார்

**கதை கேளு , கதை கேளு, மஹாபாரத கதை கேளு!**
**கொலோராடோ தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நாடகத்தின் பங்கேற்பாளர்கள்:**

1. யாழிசை
2. அவந்திகா
3. கவின்
4. அமண்டா லினெட்
5 .ருத்வா மித்ரன்
6. ஹர்ஷிவ் எல்லப்பா
7. ஆஷிகா
8 .ஓம்
9. சிந்து

**பெரியவர்கள்:**

1. அருண்ப்ரசாத்
2. கோகுல்
3. தேவி
4. பத்மா தினேஷ்

# ஈகைத்திறன் தமிழர் பண்பாடு

**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**



தமிழர் பண்பாடு என்ற தொடர் பதிவில், சென்ற பதிவுகளில் தமிழர் பண்பாடுகள் சிலவற்றைப் பற்றிச் சிந்தித்தோம். தமிழரின் ஈடிணையற்ற மற்றொரு பண்பாகிய ஈகைப் பண்பைப் பற்றிய சில கருத்துகளை இப் பதிவில் பகிர்ந்து கொள்வோம்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது **ஈதல்** என்றால் கொடுத்தல் என்று பொருள்படும். கொடுத்தல் என்ற பொருளிலேயே **ஒப்புரவு, கொடை** என்று வேறு சில சொற்களும் தமிழில் உள்ளன. மூன்று சொற்களுமே கொடுத்து உதவுதல் என்ற பொருளைப் பொதுவாகத் தந்தாலும் அவற்றுக்கென்று சிறப்புக் கருத்துகள் உண்டு .

**ஒப்புரவு** என்பது பொதுநல நோக்குடன் அனைவர்க்கும் செய்யப்படும் உதவி . இது உள்ளத்தில் அன்பின் தூண்டுதலால் விளைவது . பொதுக் கொடை வழங்குவதும் , பொதுநலத் தொண்டு செய்வதும், உலகத்துக்குப் பயன்படும் வகையில் நற்பணிகள் செய்வதும் ஒப்புரவின் பாற்படும். ஒப்புரவு செய்வதற்கு ஒருவர் செல்வந்தராக இருக்க வேண்டுவது அவசியமில்லை. ஒருவர் தனது நேரத்தையும் ஆற்றலையும் பொதுநலத் தொண்டிற்காக அர்ப்பணிக்க முன்வந்தாலே அவர் ஒப்புரவாளர் தான்.

**கொடை** என்பது செல்வம் பெற்றவர்கள் தம்மிடம் வந்து யார் எதைக் கேட்டாலும் அதைக் கொடுப்பது ஆகும்.

**ஈகை** என்பது இந்த இரண்டிலிருந்தும் சிறிது வேறுபட்டது .திருவள்ளுவர் ஈகை என்ற சொல்லுக்கு மிக அழகாக ஓர் இலக்கணம் வகுப்பார்.

" **வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.** "

என்பார். அதாவது தன்னிடம் எந்தப் பொருளும் இல்லாதவரும், மீண்டும் பிரதி உதவி செய்ய இயலாத நிலையில் உள்ளவருமாகிய ஏழைகளுக்கு அவர்களின் தேவையறிந்து உதவுவது தான் ஈகை . மற்ற உதவிகள் எல்லாம் ஏதாவது ஒரு பலனை எதிர்பார்த்துச் செய்வது தான் என்கிறது குறள். இதனையே ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான **மணிமேகலையும்**

" **ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை** "
**( மணிமேகலை பாத்திரம் பெற்ற காதை )**

என்கிறது. அதாவது பொருள் உள்ளவர்களுக்குக் கொடுப்பவர்கள் அறத்தினை விலை கூறும் வியாபாரிகள். பொறுத்துக் கொள்ள முடியாத மக்களின் பசியைப் போக்குபவர் வாழ்க்கையே இந்த உலகில் உண்மையான வழியில் செல்லும் வாழ்க்கையாகும். அதனால் பசியால் வாடுபவர்க்கெல்லாம் உணவு கொடுத்தவர் உயிரைக் கொடுத்தவர் ஆவார் என்கிறது மணிமேகலைக் காப்பியம் .

**ஈகை , கொடை, ஒப்புரவு** என்ற மூன்று சொற்களும் ஒன்று போலத் தோன்றினாலும் அவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டை எவ்வளவு ஆழமாகச் சிந்தித்து இருக்கிறார்கள் நம் தமிழ் முன்னோர் என்று நினைக்குந்தோறும் நம் மனம் இறும்பூது எய்துகிறது.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பலன் உண்டல்லவா ? ஈகை செய்வதனால் என்ன பலன் ? அதையும் வள்ளுவரே பின்வருமாறு சொல்லுவார்.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு " (குறள் 231)**
வறியார்க்கு ஒன்று ஈதல் வேண்டும் ; அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். கொடைக் குணமும் குன்றாத புகழும் தவிர மனித வாழ்க்கைக்கு ஆக்கம் தரக் கூடியது வேறெதுவும் இல்லை என்கிறது குறள். இதையே புறநானூறும்,
**" மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம்புகழ் நிரீஇத் தாம்மாய்ந் தனரே " ( புறம் 165 )** என்று குறிப்பிடுகிறது .
நிலையில்லாத இந்த உலகத்தில் நிலைபெற்று வாழ வேண்டுமாயின் ஒருவன் தன் புகழை நிலைநாட்ட வேண்டும். புகழை நிலைநாட்டுவது எப்படி ?
செல்வம் படைத்தவர்கள் தம்மிடம் வந்து இரப்போர்க்குக் கொடுத்து உதவ வேண்டும் . அவர்கள் இல்லையென்று சொல்லுமுன்பே அவர்கள் தேவையைக் குறிப்பால் உணர்ந்து கொடுத்தல் வேண்டும்.

ஈதலினால் ஒருவருக்குத் துன்பம் உண்டாகும் என்று தெரிந்தாலும் ஈதலே நன்று. கர்ணனின் கவச குண்டலங்களும் அவன் செய்த தான தருமங்களுமே அவனுக்குக் கவசமாக இருந்து அவன் உயிரைக் காப்பவை என்பதைக் கர்ணன் அறிந்திருந்த போதும், அவனிடம் வந்து அவற்றை யாசித்தபோது, இந்திரனுக்கும் கண்ணனுக்கும் அவற்றைத் தானம் செய்தான் கர்ணன் . வாமனனுக்கு மூன்றடி நிலம் தருவதால் மகாபலி அழிய நேரும் என்று அவனுடைய குரு எச்சரித்தபோதும், மகாபலி தான் வாக்களித்தவாறே மூன்றடி மண் தந்து தன் அழிவைத் தேடிக் கொண்டான்.
அறங்கள் பலவற்றிலும் ஈதலறம் தலையாயது. ஈகையிலும் சிறந்தது உணவிடுதல்.
**" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**" உண்டி முதற்றே உணவின் பிண்டம் " ( புறம் 18 )**
உடம்பானது உணவால் அமைந்த பிண்டம். உடம்பில் உயிர் இருக்க வேண்டும் என்றால் உணவு வேண்டும். அதனாலேயே உணவை ஈதலே சிறந்தது என்பர் .

உலகிலேயே மிகவும் அற்பமான , இழிவான செயல் ஒன்று உண்டென்றால் அது பிறரிடம் சென்று யாசிப்பது. ஆனால் தன்னிடம் யாசகம் கேட்டு வருபவர்க்கு ஏதும் கொடுக்க மறுப்பது இரத்தலைக் ( யாசித்தலை ) காட்டிலும் இழிந்தது.
கேட்காமலேயே ஒருவருக்கு வலியச் சென்று அவர் வேண்டிய ஒன்றைக் கொடுப்பது தான் ஈகை என்ற உயர்ந்த பண்பு . இதைக் காட்டிலும் உயர்ந்த பண்பு ஒன்றுண்டு ; அது தான் பிறர் கொடுப்பதைப் பெற மறுப்பது.

**" ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று ;**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது அதனெதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தது . "**
**( புறம் 204 )**

**ஔவையின் ஆத்திசூடியும் " ஈவது விலக்கேல்; ஏற்பது இகழ்ச்சி "** என்று வலியுறுத்துகிறது.

**" ஈ , தா , கொடு ( ஈதல் , தருதல் , கொடுத்தல் )**
**எனும் மூன்றும் முறையே இழிந்தோன்**
**ஒப்போன் , மிக்கவன் இரப்புரை " என்கிறது நன்னூல் .**

**" ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே ,**
**தா என் கிளவி ஒப்போன் கூற்றே ,**
**கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்று "**

என்கிறது தொல்காப்பியம் .

அதாவது தன்னிடம் பொருள் இல்லாத நிலையில் ஒருவர் பிறரிடம் சென்று இரப்பது " **ஈ** " என்பதாகும்.

தன்னோடு ஒப்பாக ( சமமாக ) உள்ள ஒருவரிடம் சென்று ஒரு பொருளைக் கேட்பது " **தா** " என்பதாகும். தன்னினும் தாழ்ந்தோரிடம் சென்று ஒரு பொருளைக் கேட்பது "**கொடு**" என்பதாகும். பொதுவாகத் தன்னினும் தாழ்ந்தோரிடம் சென்று எதுவும் கேட்க மாட்டோம். ஆனால் ஒரு பொதுவான நற்செயலுக்காக நன்கொடை கேட்கும்போது தன்னைக் காட்டிலும் தாழ்ந்தோரிடத்திலும் சென்று கேட்க வேண்டும். அவர் கொடுப்பதை வாங்கிக் கொள்ள வேண்டும்.

ஈ , தா , கொடு என்ற சொற்கள் ஒன்று போல் தோன்றினாலும் நம் முன்னோர் அவற்றை எவ்வாறு வேறுபடுத்திப் பயன்படுத்தி யிருக்கிறார்கள் என்று அறியும்போது தான் தமிழ் மொழியின் சிறப்பும், தமிழரின் கூர்த்த மதியும் நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

**" எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"**என்கிறது தொல்காப்பியம். அதாவது ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியாக ஒரு பொருள் உண்டு .

**ஈவது ஈகை ( வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை )**
**தருவது தருமம் ,**
**கொடுப்பது கொடை .**

செல்வந்தன் ஒருவன் தன் செல்வத்தால் பெறும் பயன் என்று ஒன்று இருக்குமானால், அது தன்னிடம் வந்து கேட்பவருக்குக் கொடுப்பதேயாகும். தான் மட்டுமே அனுபவிக்க நினைப்பது தவறாகும் என்று புறநானூறு பின்வருமாறு சுட்டுகிறது.

" உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புன பலவே " ( புறம் 189 )

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் " என்பது ஔவைப் பாட்டியின் அருள்வாக்கு .

**கடையெழு வள்ளல்கள்:**

பண்டைத் தமிழரின் ஈகைத்திறனுக்கு மிகச் சிறந்த சான்றுகளாக விளங்குபவர்கள் சங்க காலக் கடையெழு வள்ளல்கள். அவர்களின் ஈர நெஞ்சமும் வள்ளண்மைப் பண்பும் அவர்களைச் சாகா வரம் பெற்றவர்களாக ஆக்கியிருக்கிறது.

முல்லைக் கொடி பற்றிப் படரக் கொழுகொம்பு இன்றித் தவிப்பதாக எண்ணித் தான் ஏறிச் சென்ற தேரையே அக்கொடி படரக் கொடுத்தான் வள்ளல் **வேள்பாரி**.

கருமுகிலைக் கண்ட மகிழ்ச்சியில் தன் அழகிய தோகையை விரித்தாடிய மயிலைக் கண்ட **பேகன்** அம்மயில் குளிரால் நடுங்குவதாக எண்ணித் தான் போர்த்தியிருந்த பொன்னாடையை அதன் மேல் போர்த்தி மனம் நெகிழ்ந்தான்.

கிடைத்தற்கரிய அருநெல்லிக்கனியைத் தான் உண்டு நீண்ட நாள் உயிர் வாழ்தலைக் காட்டிலும், அதைத் தமிழ் மூதாட்டி ஔவை உண்டால் என்றென்றும் தமிழ் வாழும் என்றெண்ணி அக்கனியை ஔவைக்கு ஈந்து தமிழன்னையைச் சிறப்பித்தான் **அதியமான் நெடுமான் அஞ்சி**.

பருவம் பொய்த்த காலத்தில் தன் நாட்டு மக்களின் பசிப்பிணி அகற்றும் மருத்துவனாய்த் திகழ்ந்தவன் **நள்ளி** என்ற வள்ளல்.

மக்களைத் தங்கள் இசையால் மகிழ்வித்த பாணர்க்கும் கூத்தர்க்கும் வளமான நாடுகள் பலவற்றை நல்கி மகிழ்ந்தவன் **வல்வில் ஓரி**.

தன்னை நாடி வந்த இரவலர்க்குத் தன் குதிரையையும் ஏனைய செல்வங்களையும் வாரி வழங்கிய வள்ளல் **திருமுடிக் காரி**.

இவ்வாறு மனிதனுக்கு மனிதன் உதவுவது மட்டுமன்றிப் பிற உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் உதவுவதும் கூட ஈகையின் பாற்படும். " **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்** " என்ற வள்ளலாரின் வாசகத்தை இங்கு நினைவு கூறலாம்.

**ஈர நெஞ்சுடன் ஈகை செய்வோம் !**
**இசைபட வாழ்வோம் !**




**கவியரசு - கண்ணதாசன்**

## திருக்குறள்

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.**

பொருள் : உலகத்தை வாழ வைப்பது மழையாக அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.

**Meaning :** By the continuance of rain the world is preserved in existence; it is therefore worthy to be called ambrosia

| | | |
|---|---|---|
| திருக்குறள் எண் | : | 11 |
| பால் | : | அறத்துப்பால் |
| அதிகாரம் | : | வான் சிறப்பு |

# மகன் மற்றும் பென்சில் கதைகள்!

**திரு.சுகுமாறன் மாரியப்பன்**

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்க நிறுவனர் மற்றும்
குழு உறுப்பினர்களின் தலைவர்



🤔🤔🤔🤔🤔🤔🤔

ஒரு இளம் சிறுவன், தனது நாள் எப்படி சென்றது என்று சமையலறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, வளர்ந்தவுடன் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என்று தன் தாயிடம் கேட்டான்.

அம்மா ஒரு நிமிடம் யோசித்தார், பின்னர் தனது மகனிடம் ஒரு பென்சில் கொண்டு வருமாறு கூறினார்.

ஆச்சரியப்பட்ட சிறுவன் ஒரு பென்சிலை கண்டுபிடித்து அவளிடம் கொடுத்தான்.

"நீ நல்லது செய்ய விரும்பினால், "அவள் கூறினாள், "நீ இந்த பென்சிலைப் போல இருக்க வேண்டும்."

"அது என்ன அர்த்தம்?" அவன் கேட்டான்.

"முதலில்," அவள் கூறினாள், "நீ நிறைய விஷயங்களை செய்ய முடியும், ஆனால் தனியாக இல்லை.

நீ யாரோ ஒருவரின் கையில் பிடிக்க அனுமதிக்க வேண்டும்.

"இரண்டாவது, நீ நேரம் தவறாமல் வேதனை நிறைந்த கூர்மைப்படுத்தலால் செல்ல வேண்டும், ஆனால் நீ ஒரு நல்ல பென்சிலாக மாற இதை தேவைப்படும்.

"மூன்றாவது, நீ செய்யக்கூடிய எந்த தவறுகளையும் திருத்த முடியும்.

"நான்காவது, நீ வெளியே எப்படி இருக்கினாலும், மிக முக்கியமான பகுதி எப்போதும் உள் இருக்கும்.

"ஐந்தாவது," தாய் முடித்து, "ஒரு அடையாளம் செய்ய நீ பலமாக அழுத்த வேண்டும்."

உயர்ந்த அறிவுரை அல்லவா?

அவனுடைய தாய் ஐந்து முக்கியமான தலைப்புகளைத் தொட்டு சென்றுள்ளார் – குழு பணி மற்றும் வழிகாட்டுதல், விமர்சனத்தை ஏற்கும் திறன், தவறுகளை திருத்துதல், தன்னம்பிக்கை, மற்றும் கடினமாக உழைக்க வேண்டும்.

🍁🍁🍁🍁🍁🍁🍁🍁🍁🍁

## The Boy and the Pencil story !

A young boy, sitting in the kitchen discussing how his day went, asked his mother what he should do in order to be successful as he grows up.

The mother thought for a moment, and then told her son to bring her a pencil.

Puzzled, the boy found a pencil and gave it to her.

“If you want to do good,” she said, “you have to be just like this pencil.”

“What does that mean?” her son asked.

“First,” she said, “you’ll be able to do a lot of things, but not on your own.

You have to allow yourself to be held in someone’s hand.

“Second, you’ll have to go through a painful sharpening from time to time, but you’ll need it to become a better pencil.

“Third, you’ll be able to correct any mistakes you might make.

“Fourth, no matter what you look like on the outside, the most important part will always be what’s inside.

“And fifth,” the mother finished, “you have to press hard in order to make a mark.”

Great advice. Isnt it? .

His mother touched on five important topics – teamwork and mentorship, being able to accept criticism, correcting mistakes, self-confidence and working hard.

🍁🍁🍁🍁🍁🍁🍁🍁🍁🍁

# கொலுவின் சிறப்புகள்

**திருமதி. ப்ரீத்தி வெ ராமன்**





நம் இந்துக் கடவுள்களான சிவன் - பார்வதி, மஹாவிஷ்ணு - லக்ஷ்மி அவர்களின் பெருமையைச் சொல்லும் விதமாக இந்தக் கொலு அமைக்கப்பட்டிருக்கிறது.

கொலுவின் பின் திரையில் சிவன்-பார்வதி மற்றும் விஷ்ணு-லக்ஷ்மி ஓவியமாக அலங்கரிக்கின்றனர்.



**சிவன்** – சிவன் பெருமையைக் கூற 63 நாயன்மார்கள் அழகாக வரிசைப் படுத்தி வைத்திருக்கிறேன். நாயன்மார்களுக்குச் சிவாலயங்களின் சுற்றுபிரகாரத்திற்குள் கற் சிலைகள் வைக்கப்படுகின்றன. அத்துடன் அறுபத்து மூவரின் உலோகச் சிலைகளும் வருடத்தில் ஒரு நாள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த ஊர்வலத்திற்கு அறுபத்து மூவர் திருவீதி உலா என்று பெயர்.



**பார்வதி** - பார்வதியின் மைந்தன் அழகுக் குமரன் சரவணப்பொய்கையில் பிறந்து கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் படும் காட்சி பக்தியுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.



**மஹாவிஷ்ணு** – உலகப் புகழ் பெற்ற பூரி ஜகன்னாத்தில் உள்ள ஜெகன்னாத், பலராமர் மற்றும் சுபத்திரை மூவரின் திருவுருவங்கள் கையால் அழகுற வடிவமைக்கப்பட்டு அருளிட வைத்திருக்கிறேன்.

**லக்ஷ்மி** – “கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்” என்ற பழமொழியை அடிக்கடி நாம் உபயகிக்கின்றோம்! ஆனால் அந்த வாக்கியம் நம் ஆதிசங்கரர் எழுதிய கனகதாரா ஸ்தோத்ரம் கதையை அடிப்படையாக வைத்து உருவான வாக்கியம்னு எத்தனை பேருக்குத் தெரியும் என்று தெரியவில்லை! ஆகையால் அதை மையமாக வைத்து உருவாக்கியிருக்கிறேன். ஆதிசங்கரர் ஒரு ஏழைப் பெண்மணிக்கு அருள் வேண்டி கனகதாரா ஸ்தோத்திரம் பாடியதில் மகிழ்ந்த லக்ஷ்மியின் அருளால் அந்தப் பெண்மணி பொற்காசுகள் பெற்றது விவரிக்கப் பட்டிருக்கிறது.





தென்னிந்தியப் பெருமையைப் பரப்பும் அடிப்படையில், கிராமிய நடனங்களையும் அம்மாநிலத்தின் தம்பதியர்களை காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

பண்டைய சமையல் முறையையும் நவீன சமையல் முறையையும் தெளிவாக காட்டும் பொம்மைகள் அழகாக அலங்கரிக்கப் பட்டுள்ளன.



## பயனுள்ள சமையல் குறிப்புகள்

1. அவியல் செய்யும்போது தேங்காய், பச்சை மிளகாய், சீரகம் இவற்றுடன் சிறிது ஊறவைத்த கசகசாவைச் சேர்த்து அரைத்தால் அவியல் திக்காகவும், சுவையாகவும் இருக்கும்.
2. வாழைத்தண்டு கூட்டுப் பொரியல் செய்யும் போது அத்துடன் சிறிது முருங்கைக் கீரையையும் சேர்த்து செய்தால் சுவையும் மணமும் பிரமாதமாக இருக்கும்.
3. வாணலியில் ஒரு பிடி முருங்கைக் கீரையை நெய் விட்டு வதக்கி, சிறிது தேங்காய் சேர்த்து அரைத்துக் கொதிக்கும் சாம்பாரில் விட்டால் சுவை சூப்பராக இருக்கும்.
4. அவல் உப்புமா செய்யும்போது பயத்தம் பருப்பை நெத்துப்பதமாக வேகவைத்துச் சேர்த்து கலந்து செய்ய சுவை அதிகமாக இருக்கும்.
5. பாயாசத்தில் திராட்சைக்குப் பதிலாக பேரிச்சம் பழத்தை பொடியாக நறுக்கி வைத்து நெய்யில் பொரித்து போட்டால் சுவையாக இருக்கும்.
6. தோசை மாவு, பொங்கல் போன்றவற்றில் சீரகத்தைக் கைகளால் சிறிது தேய்த்துப் போட்டால் சுவையுடன் மணமாகவும் இருக்கும்.
7. பாகற்காயுடன் உப்பு, மஞ்சள் தூள், வெல்லம், எலுமிச்சைச் சாறு ஆகியவற்றை சேர்த்து அரை மணிநேரம் வைத்திருந்தால் கசப்பு காணாமல் போய்விடும்.
8. இட்லி பொடி தயாரிக்கும்போது ஒரு தேக்கரண்டி மல்லியை வறுத்து மற்ற சாமான்களுடன் பொடி செய்தால் இட்லிப் பொடி வாசனையாக இருக்கும்.
9. உருளைக்கிழங்கு வேக வைக்கும்போது அவை வெந்ததும் வெடிக்காமல் இருக்க சிறிது உப்பையும் சேர்த்து வேக வைக்க வேண்டும். இதனால் உருளைக்கிழங்கு வெடிக்காமல் நல்ல பதத்துடன் இருக்கும்.
10. தக்காளி குருமா செய்யும்போது சிறிது வெங்காயத்தைப் பச்சையாக அரைத்து ஊற்றவும். குருமா வாசனையுடன் சுவையாக இருக்கும்.

## என் தேடல்

**திருமதி - வனதுர்கா வெங்கட்**



என்னை தொலைத்த பிறகு
சொல்கிறாய் நீ,
"நீயாக  இரு" என்று.
தொலைந்து தேடுகிறேன் நான்,
நான் யாரென்று?



# புதுமைப் பெண் - 3

## எழுத்தாளர் - பத்மா தினேஷ்

ஞாயிற்றுக்கிழமை அன்று என்னடி, ஒரே யோசனையாவே இருக்க? லீவு நாள் அதுவுமா ஒழுங்கா சாப்பிடுறியா? என்ன ஒரே யோசனையாக இருக்க? தட்டப் பாத்துச் சாப்பிடு. அம்மா கூறுவதைக் கேட்டு தன் யோசனையிலிருந்து வெளி வந்தாள் சாந்தா. முதல்ல போய் அந்த நாராயணன் சார, பாக்கணும்னு சொன்னவுடன் அம்மாவிற்கு ஒரே சந்தோஷம், அவர் எப்படி இருக்கார்? நேத்து அவரும் வந்திருந்தாரா? உனக்கு எப்படி அம்மா அவரைத் தெரியும்? நீ அவரை பார்த்து இருக்கியா? அது வந்து...அது வந்து.... நீ தானடி சொல்லி இருக்க, உன் மேல் அதிகாரி, உன் மேல பாசமாய் இருப்பார் அப்படி இப்படின்னு.

அம்மா மழுப்பியது அப்பட்டமாகத் தெரிந்தது. ஆனால் கண்டுக் கொள்ளவில்லை. நேற்று நடந்த நிகழ்ச்சிப் பற்றியும் நாராயணன் சார் பற்றியும் சந்தோஷ் பற்றியும் மாறி மாறிக் குழப்பத்தை உண்டாக்க, அவரைப் பார்க்க அவர் வீட்டிற்குக் கிளம்பினாள். அலைபேசியில் அவரை அழைத்து முகவரியைப் பெற்றுக் கொண்டாள். சொன்ன முகவரிக்கு வந்து சேர்ந்தாள். கதவு தட்டும் சத்தம் கேட்க ஒரு சின்னக் குழந்தை வந்து யார் நீங்க? யார பாக்கணும்? நாராயணன் சாரைப் பாக்கணும். ஓ, தாத்தா வா உள்ள வாங்க, மழலையில் அன்பாகக் கூப்பிட்டது. அம்மா, அப்பா யாரும் இல்லையா? சந்தோஷ் உள்ளிருந்து வந்தார். நீங்களா? வாங்க வாங்க அப்பாவைப் பார்க்க வந்தீங்களா? சாந்தா ஆச்சரியத்திலும் அதிர்ச்சியில் இருந்தும் மீண்டு, நாராயணன் சார்.... எங்க அப்பா தான் மாடியில் இருக்கிறார்.


உள்ளே வாங்க. இவர் என் மனைவி உஷா, இவன் என் பையன் யுவன். தன் அழகானக் குடும்பத்தைச் சாந்தாவிற்கு அறிமுகம் செய்தார் சந்தோஷ். மன்னிச்சிடுங்க, நேத்து உங்க கிட்ட கோபமா நடந்துக்கிட்டதுக்கு, ஐயோ பரவாயில்லைங்க, முன்ன பின்ன தெரியாதவங்க கிட்ட சிரிச்சு பேசணும் என்ற அவசியம் இல்லை. இருங்க அப்பாவை கீழ கூப்பிடுறேன். பரவாயில்லைங்க வயசானவர் நானே மேலே போய் அவர்கிட்ட பேசுகிறேன். எங்க அப்பா வயசானவர்னு சொன்ன, கோச்சுக்குவாரு ஆனாலும் பரவால்ல, நீங்க மேல போய் பேசுங்க.

என்ன சார் எப்படி இருக்கீங்க, புத்தகத்தை மார்பில் வைத்து தூங்கிக் கொண்டிருந்தவர் திடுக்கிட்டு எழுந்தார். வாம்மா உள்ள வா, எப்படி இருக்க? என்ன திடீர்னு என்னப் பாக்கணும்னு உனக்கு தோணுச்சு? என் மேல ஏது எவ்வளவு பாசம்? அப்படின்னு கேட்க தான் வந்தேன், இப்பதானே புரியுது, அது என் மேல உள்ள பாசம் இல்ல உங்க பையன் மேல உள்ள பாசம்ன்னு. என் பையனும் நீயும் வேற வேற இல்லம்மா எனக்கு ரெண்டு பேருமே சமம் தான் என, நாராயணன் கூற, சாந்தா உடனே ஐயோ நான் பேச்சுக்கு சொன்னேன், நீங்க என்ன சார் அதை சீரியஸா எடுத்துக்கிட்டு... இல்லம்மா உனக்கு தெரியாது நான் எவ்வளவு பாசம் உன் மேல வச்சிருக்கேன்னு. அப்ப நான் கேட்க வந்தது தப்பு இல்ல, சொல்லுங்க ஏன் என் மேல தனி அக்கறைன்னு? அது பெரிய கதை, நானும் உங்க அம்மாவும் பால்ய சிநேகிதர்கள்.....

(தொடரும்)...

**அன்புடன்,**
**பத்மா தினேஷ்**

## பாரதியின் வரிகள்



எவனையும் வெற்றுக் காகிதம்
என எண்ணாதே!
ஒருநாள் அவன்
பட்டமாய் பறப்பான்!
—பாரதியார்



**செல்வி - யாழிசை சந்திரா ஸ்ரீதர்**

## ஓவியம்




**செல்வன் - ருத்வா மித்ரன் முருகானந்தம்**

## காலங்களின் ஓவியங்கள்


### செல்வி - அமண்டா லினெட் பிரின்ஸ் லியோ
















## ஆத்திச்சூடி

### செல்வன் - ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்

குணமது கைவிடேல்- நன்மை தரக்கூடிய நல்ல குணங்களை பின்பற்றுவதை நிறுத்திவிடாதே(கைவிடேல்).





# நீர்ப்பறவைகளும் பூங்கொடிகளும்

**திரு.ஶ்ரீதர் ராஜேந்திரன்**



ஓர் ஊரில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளம் நிறையத் தண்ணீர் இருந்தது. தண்ணீர் நிறைந்திருந்ததால் அந்தக் குளம் மிகஅழகாக விளங்கியது. அந்தக் குளத்தில் கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற நீர்ப் பூங்கொடிகள் இருந்தன.

கொக்கு நாரை போன்ற நீர்ப்பறவைகளும் இருந்தன. எல்லாம் ஒரு குடும்பம் போல் ஒன்றாக வாழ்ந்து வந்தன. அந்தக் குளம் தன் உறவினர்களான பூங்கொடிகளுக்கு வேண்டிய அளவு தண்ணீர் குடிக்கக் கொடுத்து உயிர்வாழச் செய்தது. அது போலவே, அன்புடன் தன்னிடமுள்ள மீன்களையும் நண்டு களையும் நீரீப்பறவைகளுக்கு உணவாகக் கொடுத்து உறவாடிக் களித்தது. ஓர் ஆண்டு உரிய காலத்தில் மழை பெய்ய வில்லை. ஊரே வறண்டு போய் விட்டது. பயிர் பச்சைகளும் விளையவில்லை.


அந்தக் குளத்தில் இருந்த நீரும் சிறிது சிறிதாக வற்றி, கடைசியில் அடித்தரையும் காய்ந்து போய் விட்டது. இனி அந்தக் குளத்தில் தங்களுக்கு உணவு கிடைக்காது என்றறிந்த பறவைகள் வேறு நீருள்ள குளத்தை நாடிப் பறந்து சென்று விட்டன.

நீர்ப் பூங்கொடிகளில் சின்னஞ்சிறிய கொடி ஒன்று, மற்ற பூங்கொடிகளைப் பார்த்து, இந்தக் குளத்திலேயே நாம் இனியும் இருந்தால் காய்ந்து போக வேண்டியதுதான். நீர்ப் பறவைகளைப் போல் நாமும் வேறு எங்காவது போய் விட்டால் என்ன ? என்று கேட்டது. அதற்குப் பெரிய பூங்கொடி ஒன்று, பதிலளித்தது. இந்தக் குளம் தண்ணீர் நிறைந்திருந்தபோது தாயைப்போல் நம்மை ஆதரித்துக் காப்பாற்றியது. நீர்ப்பறவைகள் சிறிதுகூட நன்றியில்லாமல் துன்பம் வந்த காலத்தில் பறந்து போய்விட்டன. நாம் நன்றி யற்றவர்களாக நடந்து கொள்ளக்கூடாது.

“காய்ந்து கருகினாலும் இந்தக் குளத்திலேயே கிடந்து சாக வேண்டியதுதான். அதற்கு வந்த துன்பம் நமக்கும் வரட்டும் என்று பங்கு கொள்வதுதான் உறவு” என்று கூறியது, எல்லாப் பூங்கொடிகளும் அதன் கருத்தை ஒப்புக்கொண்டன.

குளத்தின் வறண்ட கரையிலேயே அவை ஒட்டிக் கிடந்து தங்கள் உறவை நிலை நிறுத்தின.

கருத்துரை :-- வறுமை ஏற்பட்ட காலத்தில் நீர்ப் பறவைகள் போல் பறந்து செல்பவர்கள் உறவினரல்லர். பூங்கொடிகள் மோல் ஒட்டிக் கிடந்து பங்கு பெறும் இயல்பினரே உண்மயையான உறவினராவர்.



## ஓம்

### செல்வன் - ஓம் மகேஷ் குமார்



"முருகு" என்ற சொல்லிற்கு அழகு, இளமை என்று பொருள். ஆகவே முருகன் என்றால் அழகன் என்பது பொருளாகும். மெல்லின, இடையின, வல்லின மெய்யெழுத்துக்களுடன் உ எனும் உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு (ம்+உ, ர்+உ, க்+உ - மு ரு கு) என்றானதால், இம்மூன்றும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி இவற்றைக் குறிக்கும். கார்த்திகேயன் என்றால் கார்த்திகை பெண்களால் வளர்க்க பட்டவன் என்று பொருள்படும். கந்தபுராணப்படி, சிவன் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தெய்வீக தீப்பொறிகள் தோன்றின, அவை வாயு மற்றும் அக்னி உதவியுடன் கங்கையில் தனி ஆண் குழந்தைகளாக வளர்ந்தன. அவர்கள் கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டனர், பின்னர் பார்வதி மூலம் ஒன்றாக இணைக்கப்பட்டனர். இந்து இலக்கியங்களின்படி அவருக்கு 108 பெயர்கள் உண்டு.



## தமிழ்நாடு

### செல்வி - ஸ்ருதி மகேஷ் குமார்




தமிழ்நாடு என்ற பெயர் தமிழ் மொழியில் இருந்து பெறப்பட்டது. இது "தமிழர்களின் நிலம்" எனப் பொருள்படும். தமிழ் என்ற சொல்லின் பெயரில் சரியாக அறியப்படவில்லை.

தொன்றுதொட்டே தமிழ் மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு தமிழகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அதற்குச் சான்றாகக் கீழ்வரும் இலக்கியக் குறிப்புகளைக் காட்டலாம்:[9]

" வையக வரைப்பில் தமிழகம் கேட்ப "
—புறநானூறு,
" இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க "
—பதிற்றுப்பத்து, இரண்டாம் பத்து, பதிகம்
" இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய "
—சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை
" சம்புத் தீவினுள் தமிழக மருங்கில் "
—மணிமேகலை

## திருமதி - நந்தினி மாணிக்கவேல்






நாட்டை மண்ணாகவும், வேறு பொருளாகவும் பார்த்தவர்களுக்கு மத்தியில், நாட்டைக் கடவுளாக பார்த்த முதல் கவிஞன் பாரதி. நாட்டைத் தாய் நாடாக பாடியவர்களுக்கு மத்தியில், முதலில் நாட்டைத் தந்தை என்றும், மக்களை அதன் புதல்வர்கள் என்றும், அதைக் காப்பது கடமை என்றும் பாடிய முதல் கவிஞன்.

## விடுபட்ட எழுத்தைக் கண்டுபிடி



I. விடுப்பட்ட எழுத்தை எழுதுக.

1. ச--- கரம்;
2. மீ-----
3. குள------
4. வா----து
5. பூ----டு
6. மஞ்ச-----
7. சாம----தி
8. மூங்கி----

# விடுபட்ட மாதங்களைக் கண்டுபிடி

சித்திரை

--------------

ஆனி

--------------

ஆவணி

புரட்டாசி

---------------

கார்த்திகை


----------------

தை

---------------

பங்குனி

# அறிந்து வண்ணமிடுக



# புகைப்படம்
## செல்வி - மேகலா வெங்கட்










'அ' என்ற எழுத்திற்கு சிவப்பு நிறம் தீட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ |
| ஒ | ஆ | அ | உ | இ |
| எ | அ | ஓ | ஊ | இ |
| இ | ஐ | உ | எ | அ |
| உ | ஒ | அ | ஆ | ஈ |

# Best Wishes From


Culture & Cuisine
An Authentic Experience

**Home Style South Indian Catering,Training and Events**

**Revathy Sukumaran**
**+1(720)362-0873**
**revathys@cultureandcuisinellc.com**
**www.cultureandcuisinellc.com**

**Follow us on**

**@cultureandcuisinellc**